செய்தி வெளியீடு எண்.327 நாள். 26.6.2009

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்ட, ' குழல் மூங்கில்' குடில்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அறைகள் திறப்பு விழா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட, ' குழல் மூங்கில்' குடில்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அறைகள் திறப்பு விழா, 29.6.2009 அன்று மாலை 3 மணியளவில், மாமல்லபுரத்தில் நடைபெறுகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு என். சுரேஷ் ராஜன் அவர்கள், ' குழல் மூங்கில்' குடில்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அறைகளை திறந்துவைக்கின்றார்கள். திரு பி.விஸ்வநாதன், எம்.பி., திரு திருக்கச்சூர் கி.ஆறுமுகம், எம்.எல்.ஏ., மாமல்லபுரம் சிறப்புநிலை பேரூராட்சித் தலைவர் திரு பி.ஏ.யஷ்வந்த் ராவ், மற்றும் சுற்றுலா (ம) பண்பாட்டுத்துறையின் செயலர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் சுற்றுலா இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தோஷ் கே.மிஸ்ரா, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குகின்றார்கள்.

*************

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9